

தமிழ்நாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நேற்று (2.1.2026) வருகை தந்த இந்திய குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை விமான நிலையத்தில் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். இந்நிகழ்வில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, ஒன்றிய தகவல் ஒலிபரப்புத்துறை மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### டெல்டா மண்டலத்திற்குட்பட்ட

# மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அறிவிப்பு!



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட வருகிற 19.01.2026 திங்கட்கிழமை, மாலை 4.00 மணி அளவில், தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் நடைபெற உள்ள "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு குறித்து கலந்தாலோசிக்க, "டெல்டா மண்டலத்திற்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்" எனது தலைமையில் 03.01.2026 சனிக்கிழமை, காலை 10.00 மணியளவில் தஞ்சாவூர், மகாராஜா மகாலில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் டெல்டா மண்டலத்திற்குட்பட்ட திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, அரியலூர், பெரம்பலூர், கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, மயிலாடுதுறை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு ஆகிய மாவட்டக் கழகச் செயலாளர்/ பொறுப்பாளர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் ஆகியோர் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**கே.என். நேரு**
**முதன்மைச் செயலாளர்,**
**தி.மு.க.**



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (02.01.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார். உடன் முனைவர் துறை.இரவிச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, இணை ஆணையர்கள் எம். அன்புமணி, கே. ராமு, துறை அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் உள்ளனர்.



ஆலந்தூர் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் ப.குணாளன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு உரையாற்றினார். அருகில் தொகுதி பார்வையாளர் பத்மப்ரியா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கீதா ஆனந்தன் மற்றும் பகுதிக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.







தமிழர் திருநாளாம்
தைத் திருநாளில் சிந்தனைக்கு
விருந்து படைக்க தயாராகிறது
முரசொலி
பொங்கல் மலர்
2026
ஜனவரித் திங்கள்
15ஆம் நாள் வெளிவருகிறது.
முன் பதிவிற்கு முந்துங்கள்...
விலை ரூ.150/-